## கமல பந்தம்

படித்தால் நடுவிலொரு வகரமும், சூட்டின்மேல் நான்கு வகரமுஞ் சந்தியாய் நின்று முற்றுப்பெறு நான்காரைச் சக்கரபந்தமாம். அடியிற் காண்க.




மேலைய தலைச் செய்யுளின் முதலடி யீற்றெழுத்துத் தொடங்கி மற்றை மூன்றடிகளிலும், முதலடியிலுள்ள வெழுத்துக்களில் ஒவ்வோ ரெழுத்து இடையிட்டு வாசிக்க, ஒரு காதை கரப்புச் செய்யுள் வரும். அது வருமாறு:—

### காதைகரப்பு
### வஞ்சித்துறை யமகம்

வரதுரு வககு
வரகரு வமப
வரதரு வமவி
வரவிரு வதின.

சொற்பிரிவு :— வர, துருவ, ககுவர்,அகருவம், அபவர், அதர், உ, வம், அவி, வர, திருவ, தின.

(இதன் பொருள்) ககுவர் = திசைகளிலுள்ள ஜீவர்களுக்கு, வர = வரமளிக்கும் வள்ளலே, துருவ = மலைகளையுடையானே, அகருவம் = அன்பில்லாமையையும், அபவர் அதர் = உள்ளதைப் பற்றாதவரது வழிச்செல்லும், உ = மனத்தின், விம் = விருப்பத்தையும், அவி=(என்னிடஞ் சேராத வண்ணம்) கெடுத்தருள், வர = (என்) விருப்பத்திற்குரியவனே,